# மாகாணக்கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் : 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் - I | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|---|

➢ மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) **''நித்திலப் புன்னகை சுடர் வீசிட''** இங்கு சுடர் என்பது.
   1) சேறு  2) ஒலி  3) ஒளி  4) அழகு

2) **''செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்..''** இங்கு செயிர் என்பது
   1) கோபம்  2) பாவம்  3) மானம்  4) போர்

3) **'காலப் புனல் கனக்கும் கண்ணீரையும் சுமந்து''...** இங்கு **புனல்** என்பதன் எதிர்க்கருத்து
   1) தளல்  2) அனல்  3) மணல்  4) நீர்

4) **'நரகம் புகினும் எள்ளேன்''...** இங்கு **நரகம்** என்பதன் எதிர்க்கருத்து
   1) நகரம்  2) நாடு  3) பூமி  4) சுவர்க்கம்

5) **அவர் அந்த வலியை மாற்றாமல் தமது பிராரத்துவம் என்று கருதி அதை அனுபவித்துக் கொண்டு வந்தார்.** 'பிராரத்துவம்' என்பது
   1) தன்வினைப்பயன்  2)முன்வினைப்பயன்  3) வினைப்பயன்  4) ஆகாமியப் பயன்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) கூட்டத்தைக் குறிக்கும் மரபுச்சொற்களில், தொகுதியைக் குறிக்கும் சொல்லுக்குப் பொருத்தமற்றது.
   1) மக்கள்  2) உயிர்  3) சனம்  4) பறவை

7) ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களைக் கொண்ட தொகுதி
   1) பகலவன், மதியம், கதிரவன்  2) மேனி, யாக்கை, ஆவி
   3) கேசரி, மடங்கல், சீயம்  4) அமர், போர், சோறு

8) வேறுபட்டமைந்த சொற்கள்
   1) ஓட்டுநர் - பயணி  2) வைத்தியர் - நோயாளி
   3) கடனாளி - முதலாளி  4) ஆசிரியர் - மாணவர்

9) **''டிக்கட் வேண்டாம் கையை விடு.''** (Ticket), டிக்கட் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் சொல்
   1) நுழைவுச்சீட்டு  2) அனுமதி அட்டை  3) காலச்சிட்டை  4) சிட்டை

10) நகையும் பரிகாசமும் சேர்ந்துவரக் கவிபுனையும் ஆற்றல் படைத்தவன்
   1) வரகவி  2) ஆசுகவி  3) சிலேடைக்கவி  4) விகடகவி

11) ஒரு பொருள் தரும் இணைமொழியாக அமையும் தொடர்
   1) கோணல் மாணல்  2) கூடமாட
   3) ஏழை எளியவர்  4) அல்லும் பகலும்

12) நாவலர் தமிழ்ப்புலமை மிக்கவர் என்பது கண்கூடு. இங்கு **'கண்கூடு'** என்பது
   1) வெளிப்படை  2) அறிவுபூர்வமானது  3) தர்க்கரீதியானது  4) உண்மை

13) ஒலிக்குறிப்புச் சொல் **இடம்பெறாத** தொடர்

1) ஆத்திரத்தோடு நண்பர் அவுக்கென எழுந்தார்.

2) துடும் எனப்பாய்ந்த கல்லாவிளமை.

3) ஓடும் நதியின் சலசலப்புக் கேட்டது

4) பக்குல் பறந்ததாகச் சிலமன் இல்லை'

14) ஒரே நேரத்தில் பதினாறு விடயங்களை அவதானிப்பவர்

1) அட்டவதானி 2) சோடவதானி 3) தசாவதானி 4) சதாவதானி

15) **"காத்திருந்து அவள் போம்வழி முற்றிலும் கண்கள் பின்னழகு ஆர்ந்து களித்திட"** இத் தொடருக்குப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்.

1) வைத்தகண் வாங்காமல் பார்த்து 2) வழிமேல் விழி வைத்து

3) குறுகுறு நடந்து சிறு கை நீட்டி 4) கண்ணுக்குக் கண்ணாக

16) கடைகட்டுதல் என்ற மரபுத் தொடரின் பொருள்

1) மனமின்றி இருத்தல் 2) வெல்ல முயற்சித்தல்

3) முயற்சியை நிறுத்தி விடல் 4) முற்றும் அழிதல்

17) உண்ணாச் சொத்து மண்ணாப் போகும் என்ற பழமொழியால் உணர்த்தப்படுவது

1) சேமிப்பின் சிறப்பு 2) உலோபித்தனத்தின் விளைவு

3) தருமத்தின் அத்தியாவசியம் 4) சுயநலப் பண்பு

18) பின்வருவனவற்றில் வேறுபட்ட பொருளில் அமைந்த உவமைத்தொடர்

1) வெள்ளிடை மலைபோல 2) புறக்குடத்தில் வார்த்தாற் போல

3) விழலுக்கு இறைத்த நீர் போல 4) செவிடன் காதில் ஊதிய சங்கு போல

19) பின்வருவனவற்றுள் இருபாற் பொதுப்பெயராக அமையாத சொல்

1) குழந்தை 2) செவிலி 3) நீதிபதி 4) அதிபர்

20) "குப்பை மேட்டில் ஏறி நின்று உப்பு வண்டியை எண்ணுறாங்கள்". இங்கு உப்பு விற்பவர்கள்

1) உமணர்கள் 2) வியாபாரிகள் 3) தொழிலாளிகள் 4) கடைக்காரர்கள்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொல்லாக அமைவது

1) பட்டு 2) சங்கு 3) பக்கம் 4) உத்தமன்

22) **ஆறுமுகன் பாதம் தொழுதெழுவோம்.** ஆறுமுகன் என்பதில் வந்துள்ள போலி

1) முதற்போலி 2) இடைப்போலி 3) கடைப்போலி 4) இயல்புப்போலி

23) ஐ, ஔ ஆகிய எழுத்துக்களிற்கான இன எழுத்துக்கள் முறையே

1) அ, உ 2) ஈ, ஊ 3) இ, உ 4) அய், அவ்

24) "இலக்கிய வழி" எனும் நூல் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டது. இங்கு 'எழுதப்பட்டது' என்பதில் வந்துள்ள பகுதி

1) பெயரெச்சம் 2) வினையெச்சம் 3) முற்றுவினை 4) கூட்டுவினை

25) கவிதையின் பொருள் விளங்காது விளித்தேன். இங்கு வந்துள்ள **எதிர்மறைச் சொல்**

1) கவிதை 2) பொருள் 3) விளங்காது 4) விளித்தேன்

26) பின்வரும் தொடர்களில் உருவக அணியற்ற தொடர் எது?

1) இதயப் பேழையில் இலங்கும் நினைப்பு
2) வீதிதோறும் வானளாவும் கோபுரங்கள்
3) அறிவுக்கடலிடம் செல்வோம்
4) மனமெனும் கோலை ஊன்றி

27) உயிர்முன் மெய் புணர்த்தலுக்கு உதாரணம்

1) கல் + அரிசி    2) பலா + இலை    3) பல் + பசை    4) கலை + மன்றம்

28) ஏழாம் வேற்றுமையில் சினை இடமாதலுக்குப் பொருத்தமற்ற தொடர்

1) கையின் கண் விரல்    2) மரத்தின் கண் கிளை
3) பூவின் கண் தேன்    4) மணியின் கண் ஒலி

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவு செய்க.**

29) முன்னொட்டுக்கள் : அநீதி, அகாலம், மறுமலர்ச்சி
மரூஉ : பேர், ஆடாதோடை, புங்குடுதீவு
பண்புத்தொகை : இன்சொல், செந்தாமரை, பட்டிமன்றம்
வினைத்தொகை : கட்டுரை, சுடுசோறு, பாடுமீன்

30) தற்சமம் : கமலம், குங்குமம், அனுமதி
பிறவினை : படித்தாள், ஊட்டினாள், செய்வித்தான்
வேற்றுமைத்தொகை: பூவிதழ், கண்மணி, வீட்டுக்கூரை
பெயரெச்சம் : விழுந்த, ஓடும், பாய்ந்த

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

31) குழைக்காட்டுப் பிரதேசத்திற்கு நாளை காலை 8.00மணி தொடக்கம் 3.00 மணி வரை மின்விநியோகம் தடைப்படும். இக்கூற்று ....................... ஆகும்.

1) அறிவித்தல்    2) அறிவுறுத்தல்    3) முறைப்பாடு    4) கட்டளை

32) கொலைக்குற்றவாளியை உடனடியாகப் பிடித்துக் கூண்டில் ஏற்றுமாறு நீதிபதி, பொலிஸாருக்கு ............... பிறப்பித்தார்.

1) உத்தரவு    2) அழைப்பாணை    3) பிடியாணை    4) கட்டளை

33) தமிழ் எழுத்துக்களை அகரவரிசைப்படி எழுதியதன் தொகுப்பு .................................. ஆகும்.

1) கலைக்களஞ்சியம்    2) அகராதி    3) நிகண்டு    4) அரிச்சுவடி

34) ...................... உணவு அவசியம் என்று மாணவர்களுக்குப் .............. செய்ய வேண்டும்.

1) போசணை, போதனை    2) போசனை, போதணை
3) போசனை, போதனை    4) போசணை, போதணை

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35) கந்தனோ, கரடியோ அங்கே ........................

1) தெரிவது    2) தெரியும் உரு    3) தெரிகிறது    4) தெரிபவர்

36) தமிழ்த்தினப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களது கவிதைகளில், ஒவ்வொரு கவிதையும்......

1) வாசிக்கப்பட்டது    2) வாசிக்கப்பட்டன
3) வாசிக்கப்பட வேண்டும்    4) வாசிப்பர்

**கீழே தரப்பட்டுள்ள கவிதையை அடிப்படையாகக் கொண்டு 37 - 39 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

**தையல் துயர் க்குத் தங்காது தஞ்சிறகாம்**
**கையால் வயிறலைத்துக் காடருள்வாய் - வெய்யோனை**
**வாவு பரித் தேரேரி வாவென் றழைப்பன போல்**
**கூவினவே கோழிக்குலம்**

37) இப் பாடலினூடே வெளிப்பட்டு நிற்கும் பொழுது

1) காலைப்பொழுது
2) நடுச்சாமப்பொழுது
3) அந்திமாலைப்பொழுது
4) அதிகாலைப் பொழுது

38) **''சிறகாம் கை''** என்பதில் வந்துள்ள அணி

1) உருவக அணி
2) தற்குறிப்பேற்ற அணி
3) உயர்வு நவிற்சி அணி
4) உவமை அணி

39) இங்கு 'வெய்யோன்' என்று குறிப்பிடப்படுவது

1) சூரியன்
2) சந்திரன்
3) நட்சத்திரம்
4) கொடியோன்

40) **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

அ) எனினும் மூன்று சொல்லோவியங்களில் அவற்றின் கற்பனை வளத்தை நோக்குவோம்.
ஆ) இதனை ஆக்கித் தந்தவர் பெரும்புலவர் புகழேந்தியார்.
இ) நளவெண்பாவிலுள்ள சொல்லோவியங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கூறுவது கடினம்.
ஈ) நளமகாராஜனுடைய வரலாற்றைச் சித்திரிப்பது நளவெண்பா.
உ) இந்நூல் நளனுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சித்திரித்துக் காட்டுகிறது.

1) ஈ, ஆ, அ, இ, உ
2) அ, இ, உ, ஆ, ஈ
3) ஈ, ஆ, உ, இ, அ
4) ஈ, ஆ, உ, அ, இ

**(40 x 1 = 40 புள்ளிகள்)**

# மாகாணக்கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023

தரம் : 11

தமிழ் மொழியும் இலக்கியமும் - **II**

- **எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.**
- **இவ்வினாத் தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

1) சுருக்கமான விடை எழுதுக.

i) பின்வருந் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.

"மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்"

ii) பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளைக் கொண்டு அமைக்குக.

இதெல்லாம் என்னத்துக்கு எனக்குச் சொல்றியள் அம்மா

iii) "வரை" எனும்சொல் பெயராகவும், வினையாகவும் அமைந்து வரக்கூடியவாறு தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

iv) "இந்தப் பைல் இஞ்ச எப்பிடி வந்தது?" எனும் பேச்சு வழக்கை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.

v) **"அப்பால் மூழ்கிற்று கதிர் நெடுங்கடலுள்"** இவ்வாக்கியத்தில் உள்ள எழுவாய், பயனிலைகளை எடுத்துக் காட்டுக.

vi) **"வாழையடி வாழையாக"** எனும் அருஞ்சொற்றொடரை வைத்துப் பொருத்தமான வாக்கியம் எழுதுக.

vii) **'குசேலனது வரவு'** என்பதில் உள்ள வேற்றுமை எது? அதன் உருபு யாது?

viii) நானும் நீயும் கவிதை எழுதினோம். என்பது எவ்வகை வாக்கியம்.

ix) (தலைப்புக்குப் பொருத்தமாக அமைந்திருத்தல், கருத்துச் செறிவுள்ள நியமமொழி பயன்படுத்தப்படல், நடிப்பாற்றல் மிக்கதாக இருத்தல்) என்பவற்றில் உரைச்சித்திரத்தின் பண்பல்லாதது.

x) சந்திராயன் - 3 நிலவை ஆய்வு செய்தது. எனும் செய்வினையை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக. **(02x10 = 20 புள்ளிகள்)**

2) **பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ) இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள், எனக்கூறப்படுகிறது. சிறுவர்களாக உள்ளபோதே நற்பழக்க வழக்கங்களையும், சமூக விழுமியங்களையும், தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்துக் கொள்ள உதவுவதன் மூலம் எதிர்காலத்தில் அவர்களை நல்ல பிரஜைகளாகவும், தலைவர்களாகவும் விளங்கச் செய்யலாம். சிறுவர்களிடம் இப்பண்புகளை வளர்த்தெடுப்பதில் குடும்பங்கள், பாடசாலைகள், சமய நிறுவனங்கள் என்பன எத்தகைய பங்களிப்பைச் செய்கின்றன என்பது பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்தி ஒரு **விளக்கக் கட்டுரை எழுதுக.**

ஆ) முதியோர் எமது மூத்த தலைமுறையினர். அவர்களுக்கு முதுமை வந்துவிட்டதே என்பதற்காக அவர்களைப் புறந்தள்ள முடியாது. இளையோராகிய நாம் அவர்களைச் சுமையாகக் கருதாது. அவர்களின் உழைப்பின் பயனையே நாம் இப்போது அனுபவிக்கின்றோம். என்ற உண்மையை உணர வேண்டும். அவர்களே எமது பண்பாட்டின் வேர்கள். எனவே அவர்களைப் பாதுகாப்பதும், அவர்களுக்கான மதிப்பை அளிப்பதும் எமது கடமையாகும் என்பதை வலியுறுத்தி முதியோர் தினத்தன்று நீர் நிகழ்த்தும் **மேடைப்பேச்சு.**

இ) இலங்கை சுற்றுலா மையமாக இருப்பதனால் உல்லாசப் பயணிகளின் வருகையும் அதனால் அந்நியச்செலாவணி அதிகரிப்பும் இடம்பெறுவது இலங்கையின் அபிவிருத்திக்கு முன்னேற்றகரமான செயற்பாடாகும். இருப்பினும், எமது சமூக விழுமியங்கள் பண்பாடு, கலாசாரம் போன்றவை சீரவழிவதனையும் அவதானிக்க முடிகிறது. உல்லாசப் பயணிகளின் வருகையால் நாட்டின் வருமானம் அதிகரித்து நாடு முன்னேற்றமடையும் எனக் கருதும் ஒருவருக்கும், நாட்டின் பண்பாடு சீரழிவதுடன் போதைப் பொருள் பாவனை, நோய்த்தொற்றுகள் ஆகியன ஏற்பட்டு நாடு பாதிப்படையும் எனக் கருதும் மற்றொருவருக்கும் இடையிலான ஓர் **உரையாடல்.**

ஈ) ''இயற்கை அனர்த்தத்தால் கணவனைப் பறிகொடுத்தவள் பாக்கியம். இதனால் வருமானமற்ற நிலை. வாழ்வைத் தள்ளாட வைத்தது. தனது நான்கு பிள்ளைகளையும் வளர்த்துக் கற்பிக்க வேண்டும் என்பதே அவளது இலட்சியம். அவளுக்கு உதவுவதற்கோ யாருமிலர். கடுமையாக உழைத்துத் தன்பிள்ளைகளைக் காப்பாற்றினாள், கற்பித்தாள் இதனாற் பல சோதனைகளுக்கு அவள் முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டது. எனினும் பாக்கியம் மனந்தளரவில்லை கொண்ட இலட்சியத்திற்காகக் கடுமையாக உழைத்தாள்'' வெற்றியும் கண்டாள், இருப்பினும்..... என்பதைக் கருவாகக் கொண்டு ஒரு கற்பனைச் சிறுகதை எழுதுக.

**(25 புள்ளிகள்)**

03) **பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.**

வாழ்க்கை என்பது ஊண், உடை, உறையுள் முதலியவற்றைத் தேடிப்பெறும் முயற்சியில் தொடங்குவது. சமைத்து உண்ணல், நெய்து உடுத்தல், வீடு அமைத்து வாழ்தல் தற்காப்புக்காகப் பற்பல கருவிகள் இயற்றிக் கொள்ளல். முதலியன வாழ்க்கையின் முதற்படியில் நிகழ்வன அந்நிலையில் பொருளே வாழ்க்கையின் நோக்கமாகவும், நாட்டமாகவும் அமையும். பொருளால் அதாவது ஊண், உடை முதலியவைகளால் இன்பம் பெறமுயன்று அலைந்து அலைந்து

வாடியபின் மக்கள் வாழ்க்கையின் இரண்டாம் படியினை நாடுவர். உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும், இருக்கும் இடத்திற்கும் போராட வேண்டிய வறுமையிற் சிக்குண்டு வருந்தும் மக்கள் இரண்டாம் படியினை எய்தார். கஞ்சிக் கவலை மிகுந்த நாட்டில் கலைக் கவலை எழாது; கடவுட் கவலையும் தோன்றாது; பசித்துன்பம் அலைக்கும்; நாடு பண்பாடு எய்தாது வேண்டிய உணவு பெற்று, உடையும் பெற்று இடம் முதலியனவும் பெற்றவரே இரண்டாம் படியை எய்தும் தகுதி வாய்ந்தவர்.

தமிழ்ச் சான்றோர் ஊர்களைப் புகழத் தொடங்கிய போது மாடமாளிகையும், பிறவும் பற்றிப் புகழ்ந்துரைத்தலில் ஊக்கங்கொள்ளாமல் 'பசி என்பது அறியா ஊர்கள்' என்று புகழ்ந்த திறன் போற்றத்தக்கது. ஆதலின் வறுமையற்ற நாடே முன்னேற்றத்திற்குத் தகுதியுற்ற நாடாகும். அந்நாட்டு மக்கள் வயிற்று வாழ்வு என்னும் முதற் படியிலிருந்து கலைவாழ்வு எனும் இரண்டாம் படிக்கு உயர வல்லவர். ஏனையோர் கலை கலை என்று முழங்குதல் ஆரவாரமே அன்றிச் சிறிதும் பயன்படாதது. இரண்டாம் நிலையுற்ற மக்கள் வயிற்றுக் கவலை அற்றவராய் புலன்களுக்குச் சிறந்த விருந்து தேடி அவற்றின் வாயிலாக இன்பம் பெற முயல்வர். கண்ணுக்கினிய காட்சியாக ஓவியம், சிற்பம், நாடகம் முதலியன தேடுவர். செவிக்கு இனிய விருந்தாக இசை, காவியம், கதை முதலியன நாடுவர். அவ்வாறே மற்றப் புலன்களுக்கும் ஏற்ற விருந்து விழைந்து தேடுவர். அந்நிலையில் கலை வளர்ச்சியே மக்களின் வாழ்க்கையாக அமையும். **(10 புள்ளிகள்)**

**04) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான விடை தருக.**

இராமாயணத்தில் இராவணேஸ்வரனுக்கு நல்ல அறிவுரைகள் கூறி அவனைத்திருத்த முயன்றவன் அவனது தம்பி விபீஷணன். விபீஷணன் பண்பு மிக்கவன், கற்றறிந்தவன், நல்லவன். என்றெல்லாம் அவன் பெயரில் இராவணனுக்கு நல் அபிப்பிராயம் இருந்தது. ஆனாலும் சீதை மீது கொண்ட அளவற்ற விருப்பினால் அவளைத் திருப்பி அனுப்பிடுமாறு கூறிய வார்த்தைகளைக் கேட்டுச் சகிக்காதவனானான். இராவணனுக்கு மற்றொரு தம்பியும் இருந்தான். அவனும் மகாமேதாவி, பலசாலி கடுந்தவங்கள் செய்து அனேக வரங்களைப் பெற்றவன். தமையனுக்கு இவன் செய்த உபதேசங்களும், நல்ல அறிவுரைகளும் மிகவும் உயர்ந்தனவாகக் கருதப்பட்டன. அந்தத் தம்பிதான் கும்பகர்ணன்.

இவனும் பிரம்மபுலஸ்தியர் குடும்பத்தில் வந்த **"விஸ்வரஸ்"** என்பவரின் மகன்தான். இவனுடைய காதுகள் குடங்கள் அளவு பெரியனவாக இருக்குமாம் எனவே கும்பகர்ணன் எனப்பட்டான் என்பர். இதை வைத்தே அவனுடைய தேகபருமனை நினைத்துப் பார்த்துக் கொள்ளலாம். இவன் பிரம்ம தேவனைக் குறித்துக் கடுந்தவம் செய்து அவரிடமிருந்து ஓர் அற்புதமான வரத்தைப் பெற்றான். அவன் சாகாவரம் என்ற நித்திய வாழ்விற்கான வரத்திற்குப் பதிலாக நித்திரை வரமென ஊழ்வினையால் கேட்டுவிட்டான். கேட்டபடி பகவானால் நித்திரை வரம் வழங்கப்பட்டது. பிறகு கும்பகர்ணனுக்காகப் பரிதாபப்பட்டு ஆறுமாதங்கள் உறக்கம், ஆறுமாதங்கள் விழிப்பு என்று அது மாற்றப்பட்டது.

இராம இலக்குமணர்கள் வானர சேனையுடன் சமுத்திரத்தின் மறுகரையில் இறங்கியிருப்பதை அறிந்து கொண்ட இராவணன், மந்திராலோசனைச் சபையைக் கூட்டி ஆலோசனை கேட்டான்.

சபையில் கும்பகர்ணன் துணிந்து, ''சீதையை அபகரித்து வந்த காரியம் முன்யோசனை இல்லாத அடாத செயல்'' எனக் கண்டித்தான், விபீஷணனும் அண்ணனின் செயல் அடாததுதான் சீதையை இராமனிடம் சேர்ப்பதே நல்லது'' எனக் கூறினான். இதனால் விபீஷணன் இராவணனின் கோபத்திற்காளாகி இராமனிடம் சரணாகதி அடைந்தான்.

I. விபீஷணன் மீது இராவணன் நல் அபிப்பிராயம் கொண்டது ஏன்?
II. கும்பகர்ணனின் குணாம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
III. இராவணன் கும்பகர்ணன், விபீஷணன் ஆகியோர் எக்குடும்பத்திற் பிறந்ததாகக் கூறப்பட்டுள்ளது.
IV. இராவணன் விபீஷணன் மீது கோபம் கொண்டமைக்கான காரணம் யாது?
V. கும்பகர்ணனின் தேகபருமன் விசாலமானதெனக் கூறுவது பொருந்துமா? காரணம் தருக.

**(10 புள்ளிகள்)**

05) உமது பாடசாலையின் இலக்கிய மன்றத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள கலைவிழா பற்றியும் அங்கு நடைபெறவுள்ள நிகழ்வுகள் தொடர்பாகவும் எடுத்துக்கூறி அவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தருமாறும் ''**கலைகளின் முக்கியத்துவம்**'' எனும் தலைப்பில் உரையாற்றுமாறும் கேட்டு தமிழ்த்துறை பேராசிரியர் அ.அருள்ராசா அவர்களுக்கு 100 சொற்களில் அமையுமாறு ஒரு **கடிதம்** வரைக.

**அல்லது**

உமது பாடசாலையில் நடைபெற்ற இலக்கிய மன்றம் தொடர்பான சென்ற கூட்ட அறிக்கை ஒன்றை 100 சொற்களில் எழுதுக.

**(15 புள்ளிகள்)**